செ. கு. எண்:195 நாள் :19.12.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 19.12.2015

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை மற்றும் தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பெய்த கன மழையினால் 2.12.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், கனகம்மாசத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வேணுகோபால் என்பவரின் மகன் கோட்டீஸ்வரன்; பட்டாபிராம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெகதீஷ் என்பவரின் மனைவி ஜெயந்தி; திரு. டில்லிராஜா என்பவரின் மனைவி பூங்கொடி;

திரு. குமரன் என்பவரின் மனைவி சந்தியா, பொன்னேரி வட்டம், அத்திப்பட்டு புதுநகர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாணிக்கம் என்பவரின் மகன் ஜெகநாதன்;

3.12.2015 அன்று பொன்னேரி வட்டம், வேம்பேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. எல்லீஸ் என்பவரின் மகன் மனோகரன்;

4.12.2015 அன்று விடையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மகன் பழனி; இருளஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. டில்லி என்கிற டில்லிபாபு என்பவரின் மகன் அன்புச்செல்வன்; பூவிருந்தவல்லி வட்டம், தண்டுரை பட்டாபிராம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணகுமார் என்பவரின் மகன் யுவராஜ்; திரு. ஏழுமலை என்பவரின் மகன் மணிவண்ணன்; பொன்னேரி வட்டம், மணலிபுதுநகர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோபாலகிருஷ்ணன் என்பவரின் மகன் தினகரன்;

5.12.2015 அன்று பொன்னேரி வட்டம், காட்டூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. குமார் என்பவரின் மகன் சுந்தரமூர்த்தி;

–– ஆகியோர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

3.12.2015 அன்று வேப்பம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏழுமலை என்பவரின் மகன் காசி;

6.12.2015 அன்று மோவூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜ் என்பவரின் மகன் மகாலிங்கம்;

8.12.2015 அன்று பிரியாங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜடாங்கி என்பவரின் மகன் மணி;

—— ஆகியோர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் பெய்த கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **15** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**